**கவனிக்க.**-2007.10.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1519 - 2007 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා - 2007.10.12

1519 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 924 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 925 |
| ஏல விற்பனைகள் | 927 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒற்றோபர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைவரி விற்பனை - 2008

*2008 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆந் திகதி வரையிலுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் துறைகளில் ஆயவரிகள் பெறுவதற்கு சகல உரிமைகளையும் வழங்குவதற்குத் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகட்கு உட்பட இத்தால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*2. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூ. 100 கேள்வி வைப்பாகச் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். மட்டக்களப்புக் கச்சேரியில் 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி மதியம் 12.00 மணிவரை இலங்கை வங்கியின் கச்சேரிக் கிளையில் ரூ. 100 பணம் செலுத்தப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*3. கேள்விப்பத்திரங்கள் சீலிடப்பட்ட தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் துறையின் பெயரையும் "மட்டக்களப்பு மாவட்ட .............................................................. (துறையின் பெயர்) துறைக்கான கேள்வி" என்றும் குறிப்பிட்டு மாவட்ட செயலகத்திற்கு கேள்விப்பத்திரம் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்.*

*4. 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி கீழ் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமுகம் கொடுக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தராத்தை, திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத்தையுடைவர் என்பதை உறுதிப்படுத்த, தமது பிரிவிற்குரிய உதவி அரசாங்க அதிபரினால்/பிரதேச செயலாளரினால் கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாயின் துறையை நடாத்தி ஆயவரி அறவிடத் தகுதியுள்ளதென்றும், கேள்வித்தொகையில் மூன்றில் ஒரு பங்கைப் பிணைப்பணமாகச் செலுத்தக்கூடிய நிதி வசதி உடையதென்றும் கூட்டுறவு ஆணையாளரினால் கொடுக்கப்பட்ட ஒரு அத்தாட்சிப்பத்திரத்தைக் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.*

*5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், உடனடியாக கொள்வனவு செய்யும் உரிமை கொண்டவரென பிரகடனப்படுத்தப்படுவதுடன், விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிட்டு கொள்வனவுத் தொகையில் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்பாகவும் செலுத்துதல் வேண்டும். 40 குதிரை சக்தி 15 குதிரை சக்தி கொண்ட வெளியகப்படகு மோட்டார் விடுவிக்கப்படுவதாயின் இதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு மேலும் 50,000 ரூபா பெறுமதியான ஆதனப்பிணை அல்லது 10,000 ரூபா காசுப்பிணை சமர்ப்பிக்கப்படல் அவசியமாகும்.*

*6. நேரில் கொடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனை நிபந்தனைகட்கு இணங்கவோ, பிணைப்படுத்துவதற்கோ, பிணையுறுதித்தொகையைக் கட்டுவதற்கோ தவறுமிடத்து அவரினால் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவார். அத்துடன் அவர் அரசாங்கத்தின் கீழ் எதுவித கொந்தராத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவார். அவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தராத்துக்காரர்களினால் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டு பிணையும் கொடுக்கப்பட்டு பின் சகல கேள்விப்பத்திர வைப்புத் தொகைகளும் மீட்டுக்கொடுக்கப்படும்.*

*7. எவ்வித காரணமும் காட்டாது எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது அரசாங்க கேள்விப் பத்திரங்களையும் எற்றுக்கொள்ளாதிருப் பதற்கான தகுதி/உரிமை அரசாங்க அதிபருக்கு உரித்தாகும்.*

*8. தற்போது பாதைகள் வேலைகள் செய்யும் துறைக்கும் பாதைகள் கொடுக்கப்படும். அவ்வாறு கொடுப்பதற்கு அரச படகுகள், அல்லது வள்ளங்கள் கிடைக்காவிடின் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காக தம்முடைய சொந்த வள்ளங்களை அல்லது படகுகளை உபயோகிக்க வேண்டும். ஆனால் இயந்திரப்படகு பாவிக்கப்பட்டால் மாத்திரமே வாடகைப்பணம் கொடுக்கப்படும். இயந்திரம் பூட்டப்படாத தோணி அல்லது வள்ளத்துக்கு வாடகைப்பணம் வழங்கப்படமாட்டாது.*

*9. அரசாங்கத்தினால் வள்ளங்கள். பாதைகள் இயந்திர மோட்டார்கள் துறைக்குத்தகை எடுப்பவர்கட்குக் கொடுக்குமிடத்து அவைகளை மிகவும் கவனமாகவும் மழை, வெயில் ஆகியவற்றால் பாதிக்கப்படாமலும் பழுதடையாமலும் களவு போகாமலும் மிகவும் கவனமாகப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அவற்றுக்குரிய நட்டம், துறைக்குத்தகை எடுப்பவர்களிடமிருந்து அறவிடப்படும்.*

*10. துறைவரி விதிகளின்படி தபால் கொண்டு செல்லும் சேவகர்களும் அரசாங்க வாகனங்களும், துறைக்கூலி செலுத்த வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் தபாற் சேவகர்களிடமிருந்தும், அரச வாகனங்களிடமிருந்தும் துறைக்கூலி ஏற்கக்கூடாது.*

*11. மட்டக்களப்புக் கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.*

*12. விற்பனையின்போது தகுதியான ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விடின் 2007.11.21 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மறு விற்பனை மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறும்.*

13. ஒப்பந்தப் பத்திரத்தில் அனுமதிக்கப்பட்ட முத்திரைவரி ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படல் வேண்டும்.

எஸ். அருமைநாயகம்,
மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்,
மட்டக்களப்பு.

கச்சேரி,
மட்டக்களப்பு,
2006.08.29.

| துறையின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு | திகதியும் நேரமும் |
|---|---|---|
| மண்முனை | மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை. | 2007.11.14 மு. ப. 10.00 |
| அம்பிளாந்துறை | மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை | 2007.11.14 மு. ப. 10.00 |
| குறுமண்வெளி | போரதீவுப்பற்று, வெல்லாவெளி | 2007.11.14 மு. ப. 10.00 |

11-302

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித்தத்துவம் நீக்குதலும் இரத்துச் செய்தலும்

தெகிவளை, ஸ்ரீ சரணங்கர வீதி, 73/44 ஆம் இலக்கத்தைச் சேர்ந்ததும் தற்பொழுது நோர்வே, ஒஸ்லோ 0597 செற்றேலோகா - 22 B லெயில் NR-278 ஆம் இலக்கத்தில் வசிப்பவருமாகிய தியாகராசா சிவானந்தன் ஆகிய நான் தெகிவளை, அர்தார்ஸ் ஒழுங்கை 12/7 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சற்குணராசா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் எஸ். பி. சிவஞானம் முன்பாக 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட அற்றோனித்தத்துவத்தின் மூலம் சுப்பிரமணியம் சற்குணராசாவுக்கு வழங்கப்பட்ட சகல உரிமைத்தத்துவங்களையும் ஏற்கனவே செல்லுபடியற்றதாக்கிவிட்டதென்று இத்தால் ரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கிவிடுகிறேன்.

தியாகராசா சிவானந்தன்.

10-297

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 (2) (8) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கம்பனி பெயர் மாற்றம் செய்தல்

(அ) கம்பனியின் முன்னைய பெயர்: காமினி மோடர்ஸ் என்ட் ட்ரான்போட் (தனியார்) லிமிடெட்டெட்
(ஆ) கம்பனியின் இலக்கம் : என் (பீவீஎஸ்) 46258
(இ) கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசம் : 151/2, பரகன்தெனிய, இம்புல்கொட
(ஈ) கம்பனியின் புதிய பெயர்: டய் இச் பூஸான். பீ.எம்.டீ. (தனியார்) லிமிடெட்

செயலாளர்கள்.

10-300

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ரவி ரோ (பிறைவேற்) லிமிட்டெட்

கம்பனியின் இலக்கம் : PV 61152

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 23.08.2007

கம்பனி பதிவு செய்யப்பட்ட இடத்தின் விலாசம் :
தம்பர, மீவனாபலான, ஹொரனை

செயலாளர்.

10-301

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனம் 2007, ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : L. M. C. இன்டஸ்ரீஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

*கம்பனியின் இலக்கம் :* PV 61150
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* தச்சன்குளம், மூன்று முறிப்பு, வவுனியா.

பிறில்லியன்ற் புறொமோட்டர்ஸ் அன்ட் கன்சல்ரன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

10-305

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனம் 2007, ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* ரெக்னோ வேர்ல்ட் ஸ்ரடீஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV 61149
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 147, ராங் வீதி, குடியிருப்பு, வவுனியா.

பிறில்லியன்ற் புறொமோட்டர்ஸ் அன்ட் கன்சல்ரன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

10-306

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனம் 2007, ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர் :* புறோபில்ட் லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV 61091
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 432/B, வெலிப்பாற, தலவத்துகொட.

பிறில்லியன்ற் புறொமோட்டர்ஸ் அன்ட் கன்சல்ரன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

10-307

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப்படையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* சேசத்த பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம் :* பீ.வீ. 61298
*பதிவு செய்த திகதி :* 2007.09.07
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 889, M/1, மகேந்திரா வீதி, கொழும்பு 08.

எம். ஆர். ஜே. மல்லாவ,
செயலாளர்.

10-359

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உக்குவலை, எல்கடுவ வீதி 333/A, இலக்கத்தைச் சேர்ந்த மகீன் மொஹமட் முஸாஜீஸ் ஆகிய நான், வீசன் இன்டஸ்ட்ரீஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் அதன் சட்டத்தரணியாக என்னை நியமனம் செய்யும் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு எம். வை. எம். இம்தியாஸ் என்பவரை உறுதி செய்யப்பட்ட 2006 நவெம்பர் 03 ஆந் திகதிய 35 ஆம் இலக்க விசேட அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்கிறேன் என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கிறேன். கூறப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை செல்லுபடியற்ற தாக்குவதுடன் இனி மேற்பட்ட கூறப்பட்ட வீசன் இன்டஸ்ரீஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

மகீன் மொஹமட் முஸாஜீஸ்,

2007.09.18.

10- 371

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவுக்கமைய கீழ்க் குறிப்பிட்டுள்ள கம்பனிகள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் :-

"டி. ஆர் எக்ஸ்போற் (பிரைவேற்) லிமிற்றற்" 2007, ஆவணி 16 ஆந் திகதி சான்றிதழ் இல. PV 61042 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல. 361, கண்டி வீதி, நித்தம்புவ எனும் முகவரியில் அமைந்துள்ளது.

"டி. ஆர். பாற்ரிக்கிள் போற் (பிரைவேற் லிமிற்றற்", 2007, ஆவணி 17 ஆந் திகதி சான்றிதழ் இல. PV61043 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல. 361, கண்டி வீதி, நித்தம்புவ என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

"டி. ஆர். பேனிச்சர்மனுபச்சரிங் (பிரைவேற்) லிமிற்றற்", 2007 ஆவணி 16 ஆந் திகதி சான்றிதழ் இல. PV 61047 இன் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல. 361, கண்டி வீதி, நித்தம்புவ முகவரியில் அமைந்துள்ளது.

"இயான் ஒறியன் (பிரைவேற்) லிமிற்றற்" 2007 ஆவணி 24 ஆந் திகதி சான்றிதழ் இல. PV 61166 இன் கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளதுடன் அதன் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல. 2/54, மஜஸ்ரிக்சிற்றி, பம்பலப்பிட்டி எனும் முகவரியில் அமைந்துள்ளது.

பணிப்பாளர் சபையின் அறிவித்தலுக்கமைய,

மன்செக் சேவிசஸ் (பிரைவேற்) லிமிற்றற் (PV6),
கம்பனிகளின் செயலாளர்கள்).

6ஏ, 6 சி, டெஸ்சிவில்லா அவனியு,
பம்பலப்பிட்டி, கொழும்பு 04.
தொலைபேசி இல. : 2597910/1

10-373

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் பதிவு செய்யப்பட்டள்ளது என்பதை இத்தால் அறியத்துகின்றோம் :-

நிறுவனத்தின் பெயர் : கன்வீனியன்ஸ் பூடஸ் பிறைவேட் லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீ.வீ. 60672
பதிவு செய்த திகதி : 2007.09.10
பதிவு அலுவலத்தின் முகவரி : மே/பா சிலோன் பிஸ்கட் நிறுவனம்,
த. பெ. இல. 03 மாகும்புர,
பன்னிப்பிட்டிய.

நிர்வாகத்தர்.

10-414

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்- அம்பலாங்கொடைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் மீள அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

***உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. ராபின் சந்திரசிரி அவர்களால் 1994.07.23 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1805 இல் துண்டு 1,துண்டு 2, துண்டு 3 எனக்குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட, மூன்று இணைக்கப்பட்டகாணிகளான (1) ஏபீ2 எனப்படும் இரு இணைக்கப்பட்ட காணிகளாவன "போரகொடவத்த" இன் துண்டு ஏ, "எலபொடவத்த" இன் துண்டு 11 (2) துண்டு ஏபி3 எனப்படும் இரு இணைக்கப்பட்ட காணிகளான "போரகொடவத்த" இன் துண்டு ஏ "எலபொடவத்த" இன் துண்டு 11, (3) "எலபொட வத்த" இன் துண்டு 10 இன் துண்டு 10ஏ அத்துடன் அதிலுள்ள அனைத்து முடன் தென் மாகாணத்தில் காலி மாவட்ட வெல்லபொடபற்றுவில் அம்பலாங்கொடையில் மஹா அம்பலாங்கொடையில் அமைந்துள்ளது.***

**(விஸ்தீரணம் : துண்டு 1 - 10 பேர்ச்சஸ்
துண்டு 2 - 12 பேர்ச்சஸ்
துண்டு 3 - 14 பேர்ச்சஸ்)**

*(கடமைப்பட்டவரும், சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவருமான ஹெட்டியாஹந்தி சஹன்ரங்க ஜயான் டீ சில்வா, அம்பலாங்கொடை பிரசித்த நொத்தாரிசு டப். ஓ. ஏ. சில்வா அவர்களால் 2005.02.20 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 1390 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்படும் சொத்தை, நான் 2007.10.31 இல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**-தயவு செய்து 2007.08.10 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.08.22 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் (பத்து வீதம்) 10% ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்கான வரியாக (ஒரு வீதம்) 1% ;
(3) ஏலதாரர் கமிஷனாக விற்பனை விலையின் (இரண்டரை வீதம்) 2 1/2 ;
(4) விற்பனைக்கான மொத்த விளம்பரச் செலவு ;
(5) கிளார்க் கூவுவோர் கட்டணமாக ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ. 2000.

விற்பனையிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்குச் செலுத்த வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து, சொத்தை மீளவும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

காணி உறுதி, ஏனைய விபரங்களை, "கொழும்பு 10, டீ. பீ. ஜயா மாவத்த, 479, ஹ. ந. வ. கோபுரம், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், பிரதம முகாமையாளர்" (மீளப் பெறுகை) இடம் பெறலாம். தொலைபேசி இல. 011-2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
(அகில இலங்கை சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்.
தொலைபேசி இல. 2863121

ஆர். எஸ். எம். ஒக்சன்ஸ்,
மஹநாம ட்றைவ்.
474, பிட்டகோட்டே,
கோட்டே.

10-401

**டீ. எப். சீ. சீ. வங்கி**

*(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

***3007 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விவரணம் :***

***அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சீ. கே. பத்தேவெல அவர்களால் வரையப்பட்ட 10 யூன் 1998 ஆந் திகதியிடப்பட்ட 6075 ஆம் இலக்க வரைபடத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கினிகொட கோரளே. மெதமெதித்திய பத்து, ஓவத்த கிராமத்தில் அமைந்துள்ள தற்போது ஐவரி பார்க் என அழைக்கப்படும் துடுவே ஹேன அல்லது தொட்டபொல அல்லேஹேன நவ் கார்டின் என்னும் பெயர் கொண்ட துண்டு 34 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி. அங்குள்ள அனைத்தும் உள்ளடங்கலாக.***

***(காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 10.25 பே.)***

*(பங்காளித்துவ வியாபார அடிப்படையில் கேகாலையில் 'செரின்' எனும் பெயரிலான நிறுவனத்தை நடத்திவரும் கேகாலையைச் சேர்ந்த விஜேசிங்க முதியான்சேலாகே அனுருத்த அன்கும்புர, விஜேசிங்க முதியான்சேலாகே டிங்கிரி பண்டா விக்கிரம அன்கும்புர ஆகிய இருவராலும், குருநாகல் பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. குணவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 03.10.2003 ஆந் திகதியிடப்பட்ட 3007 ஆம் இலக்க பிணை உறுதி மூலம். டீ. எப். சீ. சீ. வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து.)*

*டீ. எப். சீ. சீ. வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**– *ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :–*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10 % (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூரதிகாரச் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரருக்கு தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) விளம்பரச் செலவான ரூபா 25,630 (மொத்தமாக)*
*(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000.*

*கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.*

*மேலதிக விவரங்களுக்கு 011- 2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீ. எப். சீ. சீ. வங்கியின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ISO 900 : 2000 இலக்கத் தராதரமுடைய*
*பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர*
*பெறுமதி மதிப்பீட்டாளர்கள்*
*மற்றும் காணி செயல் முகவர்.*

| | |
|---|---|
| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும்* |
| *24, டொறிங்டன் வீதி,* | *290, ஹவ்லொக் ரொட்,* |
| *கண்டி.* | *கொழும்பு 5,* |
| *தொலைபேசி : 081-2227593,* | *தொலைபேசி : 011-2502680, 2585408* |
| *தொலைநகல் : 081-2224371,* | *தொலைநகல் : 011-2588176,* |
| *மின்-அஞ்சல்:* schokman kandy@sltnet.lk | *மின்-அஞ்சல்:* schokman @samera1892.com |

*10 - 402*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.